[1970 மார்ச் 23

மதுரை மாவட்டத்திற்குப் புதிய தீயணைப்பு நிலையங்கள்.

40. வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் மேலும் எந்தெந்த இடங்களில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது?

மதுரை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது :—

1. உத்தமபாளையம்.
2. நத்தம்.
3. கொடைக்கானல்.
4. கம்பம்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பட்டது என்பதை குறிக்கும்.]

(3) அறிவிப்புகள்.

(அ) ஓர் அவையுரிமைக் கேள்வியையும் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தையும் மறுநாள் எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இன்று இங்கு இல்லாத காரணத்தினால், இவற்றை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

(2) நடைமுறைக் கேள்விகள்.

(ஆ) கோவையில் நடந்த மின்சாரக் கட்டண உயர்வு கிளர்ச்சி சம்பந்தமாக முதலமைச்சர் அளித்த விளக்கம் குறித்து.

திரு. பி. வேலுசாமி: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், கோவையில் சென்ற 18-ம் தேதி நடந்த மின்சாரக் கட்டண கிளர்ச்சி சம்பந்தமாக இங்கே ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் வந்தது. அந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் பற்றிய விவாதத்தில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள்.